செய்தி வெளியீடு எண்: 03-2017 நாள்: 01.12.2017

# விழுப்புரம் மாவட்டம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பாக புதியதாக கட்டப்பட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடத்தையும், கூட்டுறவுத்துறை சார்பாக புதியதாக கட்டப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளையும் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் திறந்து வைத்தார்.

*****

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம் திருநாவலூரில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பாக புதியதாக கட்டப்பட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடத்தையும், கூட்டுறவுத்துறை சார்பாக ஆசனூர், ஏ.குமாரமங்கலம், ஜி.அரியூர் ஆகிய கிராமங்களில் கட்டப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (01.12.2017) திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 23 விற்பனைக்குழுக்களில் 278 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்படுகின்றன. தற்போது 279வது ஒழுங்குமுறை விற்பனைக்கூடமாக விழுப்புரம் மாவட்டம் திருநாவலூரில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் துவக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் மொத்தம் 18 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. 19வது ஒழுங்குமுறை விற்பனைக்கூடமாக திருநாவலூரில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் துவக்கப்பட்டுள்ளது. திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட எல்லையில் 78 வருவாய் கிராமங்கள் உள்ளன. திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட பகுதியினை சுற்றிலும் உள்ள கிராமங்களைச் சேர்ந்த 46000 விவசாயிகள் ஆண்டுதோறும் பயனடைய உள்ளனர். இதனைச் சுற்றிலும் சுமார் 72 உரிமம் பெற்ற வணிகர்கள் உள்ளனர். இந்த ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் விவசாயிகளுக்கு பொருளீட்டுக்கடன் வழங்கும் திட்டம், வியாபாரிகளுக்கு பொருளீட்டுக்கடன் வழங்கும் திட்டம், விவசாயிகளுக்கு இலவச மருதத்துவ வசதி வழங்கும் திட்டம், உழவர்நல திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. மேலும், கூட்டுறவுத்துறை சார்பாக ஆசனூர், ஏ.குமாரமங்கலம், ஜி.அரியூர் ஆகிய கிராமங்களில் தலா ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வங்கிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, பள்ளிக்கல்வித்துறை சார்பாக திருக்கோவிலூர் வட்டத்தைச் சேர்ந்த திருக்கோவிலூர் (மகளிர்), திருக்கோவிலூர் (ஆண்கள்), ஏமப்பூர், ஏமப்பூர் மாதிரி, காரணைபெரிச்சானூர், ஆற்காடு, வி.புதத்தூர், விளந்தை, ஆலம்பாடி, அரகண்டநல்லூர்,

மணக்குப்பம், சித்தலிங்கமடம், திருவெண்ணெய்நல்லூர் (மகளிர்), கண்டாச்சிபுரம் (ஆண்கள்), கண்டாச்சிபுரம் (மகளிர்), ஏனாதிமங்கலம், வீரப்பாண்டி, திருவெண்ணெய்நல்லூர் காந்தி நினைவு ஆகிய மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 3,393 மாணவ மாணவியர்களுக்கு ரூ.4,20,73,200/- மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, திருக்கோவிலூர் சார் ஆட்சியர் திருமதி.சாருஸ்ரீ,இ.ஆ.ப., கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர்.க.காமராஜ், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.குமரகுரு, முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஜோ.ஆஞ்சலோ இருதயசாமி, கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் திரு.ஆ.பாலகிருஷ்ணன், துணை பதிவாளர்கள் திரு.சக்ரவர்த்தி, திரு.கண்ணன், திரு.சுகுமார், திரு.பால்ராஜன்வில்லியம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.